பல்வேறு தொழிற் பூங்காக்களை நிறுவி சாதனை படைத்துள்ளது

விருதுநகரில் அமைய உள்ள ஜவுளி பூங்கா பணி: சிப்காட் நிறுவனத்திடம் வழங்க வேண்டும்

பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, மார்ச்.19–

விருதுநகரில் அமைய உள்ள பிரதமரின் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடை பூங்கா பணியை சிப்காட் நிறுவனத்திடம் வழங்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திரமோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி யுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று பிரதமர் நரேந்திர மோடிக்கும், தொழில் மற்றும் வர்த்தக துறை மந்திரி பியூஷ் கோயலுக்கும் தனித்தனியாக கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:–

தமிழ்நாட்டில் பிரதமரின் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடை பூங்காவை (பி. எம். மித்ரா) அமைத்திட விருதுநகர் மாவட்டம், இ.குமாரலிங்கபுரம் கிராமத்தினை தேர்வு செய்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இப்பூங்காவின் மூலமாக தமிழ்நாட்டின் தென்மாவட்டங்கள் பெரிதும் பயனடையும்.

தமிழ்நாட்டில் தொழிற்சாலை களுக்கு தேவையான நிலங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் முகமையாக செயல்படும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) இப்பூங்கா அமையவுள்ள இடத்தில் ஏற்கனவே 1,052 ஏக்கர் நிலத்தினை தன்வசம் வைத்துள்ளது. அதனால் அந்நிறுவனம் இந்த திட்டத்தை உடனடியாக அங்கு செயல்படுத்திட தயாராக உள்ளது.

பெரிய தொழில் பூங்காக்களை நிறுவி...

தமிழ்நாட்டில் சிப்காட் நிறுவனம் பெரிய தொழில் பூங்காக்களை நிறுவி, தனது திறனை நிரூபித்துள்ளது. தற்போது மாநிலத்தில், 2,890 நிறுவனங்கள் 3 லட்சத்து 94 ஆயிரத்து 785 பணியாளர்களுடன், 38 ஆயிரத்து 522 ஏக்கரில் 28 தொழிற்பேட்டைகளை அந்நிறுவனம் நிறுவியுள்ளது.

தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்படும் தொழிற் பூங்காக்களில் தொழில் தொடங்க விரும்புகிறது. தமிழ்நாட்டில் தனியாரால் மேம்படுத்தப்பட்டு உள்ள தொழிற் பூங்காக்கள் குறைந்த அளவிலேயே வெற்றியை கண்டுள்ளது.

பி.எம். மித்ரா பூங்காவை சிப்காட் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தினால், இந்த திட்டத்தின் நோக்கங்களை வெற்றிகரமாக அடைந்திட இயலும் என்று தமிழ்நாடு அரசு உறுதியாக நம்புகிறது.

எனவே, இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான நிலங்களை தன்வசம் வைத்துள்ள சிப்காட் நிறுவனம், ஏற்கனவே பல்வேறு தொழிற் பூங்காக்களை மேம்படுத்தி, செயல்படுத்துவதில் உறுதியான சாதனை நிகழ்த்தி உள்ளதால், தமிழ்நாட்டில் சிப்காட் நிறுவனத்தின் மூலம், பிரதமரின் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடை பூங்கா (பி.எம். மித்ரா) திட்டத்தினை செயல்படுத்திட வேண்டும்.

இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

டெல்லியில் நடந்த உலக சிறுதானிய மாநாட்டில் கோவை இயற்கை விவசாயி பாப்பம்மாள் பங்கேற்பு

‘சிறுதானிய உற்பத்தியை பெருக்குங்கள்’: விஞ்ஞானிகளுக்கு மோடி அழைப்பு

புதுடெல்லி, மார்ச்.19–

சிறுதானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கு விரைந்து செயல்படு மாறு விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

நடப்பு 2023ம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா.சபை அறிவித்தது. இதற்கு இந்தியாதான் முன்மொழிந்தது. இந்த நிலையில், டெல்லியில் நேற்று உலக சிறுதானிய மாநாடு நடந்தது.

இந்த மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

இந்திய நாட்டின் முன்மொழிதலாலும், முயற்சிகளாலும் இந்த ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா. சபை பிரகடனம் செய்திருக்கிறது. இது நமது நாட்டுக்கு கிடைத்துள்ள பெருமை ஆகும்.

சிறுதானியங்களை ஒரு உலகளாவிய இயக்கமாக மேம்படுத்துவதற்கு இந்தியா தொடர்ந்து செயலாற்றி வருகிறது. சிறுதானிய பயிர்கள் பாதகமான கால நிலை சூழல்களிலும் எளிதாக வளரக்கூடியவை ஆகும். அவற்றுக்குரசாயனங்களோ,உரங்களோ தேவையில்லை. இந்தியாவின் சிறுதானிய திட்டம் நாட்டின் 2□ கோடி சிறிய, விளிம்புநிலை விவசாயிகளுக்கு நன்மை பயக்கும். இன்றைக்கு சிறுதானியங்கள் தேசிய உணவுதானிய தொகுப்பில் 5 முதல் 6 சதவீத பங்களிப்பைச் செய்கின்றன.

இந்த பங்களிப்பை அதிகரிப்பதற்கு (சிறுதானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கு) விரைந்து செயல்பட வேண்டும் என்று நான் இந்திய விஞ்ஞானிகளையும், விவசாய நிபுணர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக நாம் அடையக்கூடிய இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும்.

உணவு பதப்படுத்தும் துறையில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை மத்திய அரசு தொடங்கி இருக்கிறது. இந்த திட்டத்தை சாதகமாக எடுத்துக்கொண்டு, சிறுதானியங்கள் அடிப்படையிலான தயாரிப்புகள் உற்பத்தியை பெருக்க வேண்டும்.

உணவு பாதுகாப்பு மற்றும் உணவு பழக்கவழக்கம் தொடர்பான சவால்களை சமாளிப்பதற்கு சிறுதானியங்கள் உதவும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்தியாவில் 1 கோடியே 70 லட்சம் டன் சிறுதானியங்கள் உற்பத்தி செய்யப்படுவதும், இவை ஆசியாவில் 80 சதவீத பங்களிப்பைக் கொண்டிருப்பதும், உலகளவில் 20 சதவீத பங்களிப்பை பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகளவில் ஒரு ஹெக்டேருக்கு சராசரி சிறுதானிய உற்பத்தி 1,229 கிலோ ஆகும். இது இந்தியாவில் 1,239 கிலோவாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

டெல்லியில் நடந்த உலக சிறுதானிய மாநாட்டில் கோவையை சேர்ந்த இயற்கை விவசாயி பாப்பம்மாள் பங்கேற்று பிரதமர் மோடிக்கு சால்வை அணிவித்தார்.

கட்டுமான பணிகளில் நவீன தொழில்நுட்பங்களை கையாள வேண்டும்: பொதுப்பணித்துறை என்ஜினீயர்களுக்கு அமைச்சர் எ.வ.வேலு அறிவுரை

சென்னை, மார்ச்.19–

சென்னையில் பொதுப் பணித்துறை என்ஜினீயர்கள், கட்டிட கலைஞர்களுக்கு நடைபெற்ற பயிற்சி முகாமில், அரசு பணிகளில் நவீன தொழில் நுட்பங்களை கையாள வேண்டும் என்று அமைச்சர் எ.வ.வேலு அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை என்ஜினீயர்கள், கட்டிட கலைஞர்களுக்கு சென்னை அடையாறில் உள்ள நட்சத்திர ஓட்டலில் பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த முகாமை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது:

பொதுப்பணித்துறை மூலம் கட்டப்படும் கட்டிடங்கள் அனைத்தும் இயற்கை சீற்றங்களான பூகம்பம், புயல் மற்றும் சுனாமி போன்றவற்றை எதிர்கொள்ளும் விதத்தில் தரம் மற்றும் உறுதித்தன்மையுடன் கட்டப்பட்டு வருகிறது.

இந்த கட்டிடங்களை உருவாக்கும் பணியில் நமது என்ஜினீயர்கள், கட்டிட கலைஞர்கள் மட்டுமல்லாமல், நம் துறை சார்ந்த அனைத்து பணியாளர்களின் பங்களிப்பும் இன்றியமையாதது.

வீடு, நிர்வாக அலுவலகம், தொழிற்சாலை போன்ற எந்த வகை கட்டிடங்களாக இருந்தாலும், அவை பொதுமக்களின் நீண்ட நாள் பயன்பாட்டிற்கு நிலைத்திருக்க வேண்டியது அவசியம்.

கட்டிட செலவினங்கள் குறையும்

கட்டுமானபொறியியல்வல்லுநர்கள் உலக சந்தையில் கிடைக்கும் நவீன கட்டுமான பொருள்களின் வருகை, அவற்றின் தன்மை, பயன்பாடு, விலை ஆகியவற்றை அவ்வப்போது அறிந்து கொள்ள வேண்டும்.

அத்தகைய நவீன தொழில்நுட்ப நடைமுறைகளைப் பொதுப்பணித்துறை என்ஜினீயர்கள் மற்றும் கட்டிட கலைஞர்கள் அறிந்து, அவற்றை இத்துறை உருவாக்கிடும் கட்டிடங்களில் பயன்படுத்தினால் இன்னும் தரம் மற்றும் உறுதித்தன்மை யோடு கட்டிடங்கள் உருவாகும். கட்டிடங்களுக்கான செலவினங்களும் குறையும்.

எனவே என்ஜினீயர்கள் மற்றும் கட்டிட கலைஞர்கள் கட்டுமானங்களில் அவ்வப்போது அறிமுகப் படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொண்டு அவற்றை நடை முறைப்படுத்துவதில், ஆர்வமுடன் செயல்பட்டாக வேண்டும்.

மண் பரிசோதனை, கட்டிடத்திற்கு தேவையான உறுதித் தன்மையுடன் இருக்கிறதா? என்பதை முதலில் ஆராய வேண்டும். அதேபோல், மின் அமைப்புகளும் கான்கிரீட் போன்ற அமைப்புகள் குறுக்கீடு இல்லாமல் வடிவமைக்கப்பட வேண்டும். மின் என்ஜினீயர்கள் அவ்வப்போது மின் அமைப்புகளை ஆய்வு செய்து மின் கசிவு ஏதும் ஏற்படாத வண்ணம் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த பயிற்சி முகாமில் பொதுப் பணித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா, முதன்மை தலைமை என்ஜினீயர் ரா.விஸ்வநாதன், தலைமை என்ஜினீயர்கள் க.ஆயிரத்தரசு ராஜசேகரன், சத்தியமூர்த்தி, ரவிச்சந்திரன், இளஞ்செழியன், தலைமை கட்டிட கலைஞர் மைக்கேல் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கலை அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு அடுத்த கல்வியாண்டில் புதிய மதிப்பெண் முறை

சென்னை, மார்ச்.19–

கலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு புதிய மதிப்பெண் முறை கொண்டு வரப்பட்டு இருப்ப தாகவும், இது அடுத்த கல்வியாண்டு (2023–24) முதல் அமலுக்கு வர இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

50 இளங்கலை, 75 முதுகலை என மொத்தம் 127 பாடத் திட்டங்களுக்கான மாதிரி பாடத்திட்டத்தை தமிழ்நாடு மாநில உயர்கல்வி கவுன்சில் விரைவில் அறிமுகம் செய்ய இருக்கிறது.

தொழில்துறை உள்ளீடுகள், பல்கலைக்கழக மானியக்குழு வழிகாட்டுதல்கள், நான் முதல்வன் திட்டம் ஆகியவற்றை அடிப்படையில் பாடங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும், வேலைவாய்ப்பு சார்ந்த படிப்புகள் மற்றும் மென்திறன்களுடன் மேம்படுத்தப்பட்டிருக்கிறது என்றும், மாநிலம் முழுவதும் இதேபோன்ற பாடத்திட்டத்தை பின்பற்றுவது, ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து மற்றொரு பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் செல்வதற்கு வசதியாக இருக்கும் என்றும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி கவுன்சில் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, இளங்கலை படிப்பு களுக்கான மாதிரி பாடத்திட்டத்தில் பி.காம்., பி.பி.ஏ., பி.சி.ஏ. உள்ளிட்ட படிப்புகளுக்கு ஏற்கனவே முதல் 2 செமஸ்டர்களில் தமிழ் மற்றும் ஆங்கிலம் இருந்தநிலையில், தற்போது 3 மற்றும் 4வது செமஸ்டர்களிலும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. மாதிரி பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தும் போது, கலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கான புதிய மதிப்பெண் முறையும் கொண்டு வரப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

அதன்படி, தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளில் படிக்கும் மாணவர்களுக்கு 75 சதவீத மதிப்பெண்களுக்கு செமஸ்டர் தேர்வும், 25 சதவீத மதிப்பெண்களுக்கு அகமதிப்பீடு தேர்வும் நடத்தப்படும் என்று கூறப்படுகிறது. அதாவது, 75:25 என்ற விகிதத்தில் மதிப்பெண் முறை கொண்டு வரப்படுகிறது. தன்னாட்சி கல்லூரிகளை பொறுத்தவரையில் 50:50, 60:40 என்ற விகிதத்தில் மதிப்பெண் முறை நடைமுறையில் இருந்து வருகிறது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு மாநில உயர்கல்வி கவுன்சிலால் அடுத்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட இருக்கும் இந்த புதிய மதிப்பெண் நடைமுறை, பல்வேறு ஆலோசனைகளுக்கு பிறகு, பல்கலைக்கழக துணைவேந்தர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது.

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் ஒரே தேர்வு கட்டணம்:அமைச்சர் பொன்முடி தகவல்

சென்னை, மார்ச்.19–

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் ஒரே தேர்வு கட்டணத்தை நிர்ணயிப்பது தொடர்பாக குழு அமைத்து முடிவு செய்யப்படும் என்று உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி கூறினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் அனைத்து பல்கலைக்கழக துணை வேந்தர்கள், பதிவாளர்களுடனான ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது. அந்த கூட்டத்திற்கு உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தலைமை தாங்கினார். கூட்டத்திற்கு பின்பு அவர் பத்திரிகை யாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:–

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஊதியம், நிர்வாகம் போன்றவற்றில் வெவ்வேறு முறைகள் பின்பற்றப்படுவதை மாற்றி அமைத்து, அனைத்து பல்கலைக்கழகங்களிலும் நியமனம், தேர்வு கட்டணம் என அனைத்து விவகாரங்களிலும் ஒரே மாதிரியாக செயல்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு இருக்கிறது.

பல்கலைக்கழகங்கள் அனைத்தி லும் பேராசிரியர்கள், துணை பேராசிரியர்கள், எழுத்தர்கள், பதிவாளர்கள், ஆசிரியரல்லாத பணியாளர் என அனைத்து பிரிவினருக்கும் ஒரே மாதிரியான ஊதியம் அளிப்பது பற்றியும், மாணவர்களுக்கு ஒரே மாதிரியான தேர்வு கட்டணத்தை நிர்ணயிப்பது பற்றியும், ஒரே மாதிரியான நிர்வாகத்தை உருவாக்குவது பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. இதனால் பல்கலைக்கழகங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் நீங்கும். அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட உள்ளது. அந்த குழுவின் பரிந்துரையை ஏற்று ஓரிரு மாதங்களுக்கு உள்ளாக அதுபற்றி அறிவிக்கப்படும்.

போலி பட்டங்கள் வழங்கப்பட்ட தாக புகார்கள் வந்தன. இனி எந்த பல்கலைக்கழகத்திலும், தனியார் அளவிலோ அல்லது பல்கலைக்கழக அளவிலோ கூட்டங்கள் நடத்தப்பட்டால், அது உயர் கல்வித்துறை செயலாளரின் அனுமதியின் பேரில் நடத்தப்பட வேண்டும். அந்த கூட்டத்திற்கு வேறு யாரையும் அழைக்க வேண்டும் என்றாலும் அவரது ஒப்புதல் பெறபட வேண்டும் என்பதையும் இந்த கூட்டத்தின் மூலம் அறிவுறுத்தி இருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

பெயர் மாற்றம்

அ.முகம்மது மீரா தந்தை பெயர் அமீர்பாட்சா, பிறந்த தேதி 07.02.1984 (சொந்த ஊர்: வீரசோழன்), எண் 130ஏ, சங்கர் நகர், புஜ்ஜி பாபு நகர், அத்திப்பட்டு, திருவள்ளூர், தமிழ்நாடு 600120 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி அ.முகம்மது மீரா தந்தை பெயர் அமீர் பாஷா எனறு அறியப்படுவேன்.

A- முகம்மது மீரா
தந்தை பெயர் அமீர்பாட்சா

வீடு மனை ஏல விற்பனை

சென்னை-12, நம்மாழ்வார் பேட்டை, சுப்புராயசெட்டி 3வது தெரு, பழைய நெ.15/A, புதிய நெ.38/1, தற்போதைய நெ.58ல் உள்ள திருமதி.கஸ்தூரிக்கு சொந்தமான வீடும், மனையும் அதே இடத்தில் 21.03.2023 அன்று மாலை 5.00 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும்.

ஸ்ரீ ராஜ் & கோ, சென்னை-1
Ph: 2538 5686

PUBLIC NOTICE

My clients, **Mr. G. S. Raju and Mrs. R. Yuvanthi** are the Owners of the property being Land and building, land of an extent of 1760 sq.ft., comprised in Grammanatham S.No.2/3, as per Patta S.No.137/15 of Kathirvedu Village as per Property Assessment Notice bearing Door No.2/3, Ambedkar Street, Kathirvedu East, Kathirvedu, Chennai – 600 066, they having purchased the same in terms of the Sale Deed dated 24.06.2016 (Doc.No.8750/16, S.R.O. - Ambattur).

They have created an Equitable Mortgage in favour of Canara Bank (Previously Syndicate Bank) by depositing the title documents with them. It is represented by my clients that the Title document being, Original Sale Deed dated 24.06.2016 (Doc.No.8750/16, S.R.O. - Ambattur) under which they purchased the said property was misplaced, while in the custody of Canara Bank (Previously Syndicate Bank).

Any person having custody of the said original document or has any claim or interest over the said property, can forward their objections or claims along with the relevant documents to me within 7 days of this Public Notice.

If I do not receive any claim from any person within 7 days, it will be strictly presumed that this property is absolutely free from any claim or encumbrance and no one has any claim over this property.

G. HARIDASS, Advocate
New No.4, Old No.32, Madurai Veeran Koil Street, T. Nagar, Chennai–17.
Ph No.044-4855 5037 / 28242425

மீட்பு அதிகாரி அலுவலகம்,
கடன் மீட்பு தீர்ப்பாயம்–I, டெல்லி
4வது தளம், ஜீவன் தாரா கட்டிடம், பாராளுமன்ற தெரு, புதுடெல்லி 110001

ஆர்.சி. எண். 51/2010

விற்பனை அறிவிப்பு

பிகாசஸ் அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட். லிமிடெட் Vs ஹரினிவாஸ் டிரேடிங் & சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்

வருமான வரிச் சட்டம், 1961ன் இரண்டாவது அட்டவணையின் விதி 38, 52(2) மற்றும் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கு பாக்கி செலுத்த வேண்டிய கடன்களை திரும்பப் பெறுதல் சட்டம், 1993ன் விற்பனை அறிவிப்பு

CD 1: M/S. ஹரினிவாஸ் டிரேடிங் & சர்வீசஸ் பிரைவேட். லிமிடெட். ஆர்2, இரண்டாவது தளம் கல்காஜி புதுடெல்லி 110019.
CD 2: Sh. ஹரி நாராயண், இயக்குனர், பிரதிவாதி எண். 1, கே–14, கல்காஜி, புதுடெல்லி 110019.
CD 3: Sh. கிருஷ்ணா PH, இயக்குனர், பிரதிவாதி எண். 1, 2/13, 15வது பிரதான 4வது பிளாக் நந்தினி லேஅவுட் பெங்களூர் 110096
CD 4: திருமதி. ராணி p W/o ரியோ 4 ஏகேஆர் நகர் (புதிய எண். 17/9), ஸ்ரீதேவிகுப்பம், வளசரவாக்கம், சென்னை–87.

1. ரூ. 39,52,792.64 உடன் பெண்டன்லைட் மற்றும் 01.06.2007 முதல் முழுமையான தொகையை பெறும் காலம் வரை எதிர்கால வட்டி மற்றும் மீட்புச் சான்றிதழின்படி சான்றிதழ் கடனாளிகளிடமிருந்து ரூ. 42,000/– மற்றும் செலவுகள் மற்றும் கட்டணங்களுக்காக 15.03.2010 தேதியிட்ட ஓஏ எண் 46/2007 ல் உள்ள மீட்புச் சான்றிதழ் எண். 51/2010, தலைமை அதிகாரி, கடன் மீட்பு தீர்ப்பாயம் I –ஆல் வரையப்பட்டது. 2. மேலும் கீழே கையொப்பமிடப்பட்டவர் கூறப்பட்ட சான்றிதழின் திருப்திக்காக கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை விற்க உத்தரவிட்டுள்ளார். 2. மேலும் கீழே கையொப்பமிடப்பட்டவர் கூறப்பட்ட சான்றிதழின் திருப்திக்காக கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை விற்க உத்தரவிட்டுள்ளார். 3. நிலுவை தொகையின் ரூ. 39,52,792.64 உடன் பெண்டன்லைட் மற்றும் 01.06.2007 முதல் முழுமையான தொகையை பெறும் காலம் வரை எதிர்கால வட்டி மற்றும் கட்டணம்.ரூ. 42,000/– நிலுவையில் உள்ளது. ஒத்திவைப்பு உத்தரவு ஏதும் இல்லாத பட்சத்தில், கீழ்க்கண்ட சொத்துக்கள்/சொத்துகள் இ–ஏலம் மூலம் விற்கப்படும். மேலும் www.drt.auction.net என்ற இணையதளத்தின் மூலம் 20.04.2023 அன்று மதியம் 12.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை "ஆன்லைன் எலக்ட்ரானிக் ஏலம்" மூலம் ஏலம் நடைபெறும், தேவைப்பட்டால் மதியம் 01.00 மணிக்குப் பிறகு 5 நிமிடங்களுக்கு நீட்டிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வ. எ.	சொத்து விவரம்	குறைந்தபட்ச விலை	இஎம்டி
1	எண். 19 மற்றும் 19எ காமராஜ் அவென்யூ, ஸ்ரீ தேவி கார்டன், ஸ்ரீ தேவி குப்பம் சாலை வளசரவாக்கம் கிராமம், சென்னை–87ல் உள்ள சொத்து	ரூ. 3,10,74,000/–	ரூ. 32,00,000/–

4. மீட்பு அதிகாரி, DRT–I, டெல்லி –ஏ/சி ஆர்.சி. எண் 51/2010 பெயரில் டிமாண்ட் டிராப்ட்/பே ஆர்டர் மூலம் இஎம்டி செலுத்த வேண்டும் மற்றும் சுய சான்றளிக்கப்பட்ட அடையாள நகல் (வாக்காளர் அடையாள அட்டை/ஓட்டுனர் உரிமம்/பாஸ்போர்ட்). எதிர்காலத் தொடர்புக்கான முகவரி மற்றும் பான் கார்டின் சுயசான்றளிக்கப்பட்ட நகல் ஆகியவை 18.04.2023 மாலை 5.00 மணிக்கு முன் DRT–I, டெல்லியில் உள்ள மீட்பு அதிகாரியின் அலுவலகத்திற்குச் சென்றடைய வேண்டும், அதன் பிறகு பெறப்பட்ட இஎம்டி பரிசீலிக்கப்படாது. வெற்றிகரமான ஏலதாரர்களின் விஷயத்தில் மேற்கூறப்பட்ட டெபாசிட் சரிசெய்யப்படும். வெற்றிபெறாத ஏலதாரர், இ–ஏல விற்பனை நடவடிக்கைகளை முடித்தவுடன், இ–ஏல சேவை வழங்குநர்/வங்கி/நிதி நிறுவனத்திடம் இருந்து அத்தகைய அறிக்கையைப் பெற்ற பிறகு, டிஆர்டி–I, டெல்லி பதிவாளரிடமிருந்து நேரடியாக இஎம்டி–ஐ திரும்பப் பெறலாம். 5. இஎம்டி–ஐக் கொண்ட உறை மீது, அனுப்புநரின் விவரங்களுடன், அதாவது முகவரி, மின்னஞ்சல் ஐடி மற்றும் மொபைல் எண் போன்றவற்றுடன் "ஆர்.சி.எண். 51/2010" என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். 6. வருங்கால ஏலதாரர்கள் தங்களை போர்ட்டலில் பதிவு செய்து, பயனர் ஐடி/கடவுச்சொல்லை முன்கூட்டியே பெற வேண்டும், M/S C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், 605A, 6வது மாடி மைத்ரிவனம், அமீர்பேட்டை ஹைதராபாத்–500038லிருந்து மேலே உள்ள இ–ஏலத்தில் ஏலம் எடுப்பதற்கு இது கட்டாயமாகும். தொடர்பு கொள்ள வேண்டிய மொபைல் எண். 08142000809, லேண்ட் லைன் 040–23736405 இணையதளம்:www.drt.auction.com மற்றும் மின்னஞ்சல்: ஐடி: info@bankauctions.in. சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரிகள்/உதவி எண்கள் போன்றவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

பெயர் மற்றும் பதவி	மின்னஞ்சல் & தொலைபேசி எண்கள்.
திரு. ராம காந்த் பாண்டே, மூத்த மேலாளர்	மொபைல் எண். 9087788888

விற்கப்படுவதற்கு முன்மொழியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்தவரை சான்றிதழ் கடன்தாரர்களுக்கு உரிமையுடைய உரிமைகளாகும். பொறுப்புகள் ஏதேனும் இருந்தால் அதனுடன் சேர்த்து சொத்துகள் விற்கப்படும். அறிவிப்பில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களின் அளவு மீட்புச் சான்றிதழ் அட்டவணையின்படி உள்ளது. எந்தவொரு காரணத்திற்காகவும் அளவின் எந்த மாற்றத்திற்கும் மீட்பு அலுவலர் பொறுப்பேற்க மாட்டார். சொத்துக்கள் 'எங்கே எப்படி உள்ளதோ அப்படியே'என்ற அடிப்படையில் விற்கப்படும். ஏலதாரர்கள் வங்கியில் உள்ள உரிமைப் பத்திரங்களின் நகல்களைப் பார்க்கவும், சொத்து விவரங்கள்,வில்லங்கங்கள் போன்றவற்றின் அடையாளம் மற்றும் சரியான தன்மையை சரிபார்க்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். 8. சொத்து விற்பனை தேதிக்கு முன் வருங்கால ஏலதாரர்கள் மூலம் சரிபார்க்கப்படலாம்.அதற்கு மேலே குறிப்பிட்டுள்ள வங்கி அதிகாரியை தொடர்பு கொள்ள வேண்டும். 9. கீழ்க்கையொப்பமிடப்பட்டவரால் நியாயமற்றதாகக் கண்டறியப்பட்டால், ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது எந்தக் காரணமும் கூறாமல் எந்த நேரத்திலும் ஏலத்தை ஒத்திவைக்கவோ உரிமை உண்டு. 10. பான் கார்டு, பாஸ்போர்ட், வாக்காளர் அடையாள அட்டை, செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் அல்லது அரசாங்கம் மற்றும் PSUSலினால் வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை போன்ற அடையாளம்/அடையாளச் சான்றிதழ் ஆகியவற்றை DRT–ன் பதிவாளரிடம் அளித்து இஎம்டி தொகையை வெற்றி பெறாத ஏலதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம். வெற்றி பெறாத ஏலதாரர்கள் தங்கள் இஎம்டி தொகையை திரும்பப் பெறுவதை உறுதிசெய்ய வேண்டும், நியாயமான நேரத்திற்குள் பெறப்படாவிட்டால், உடனடியாக மீட்பு அதிகாரி, DRT–I, டெல்லி/ அல்லது வங்கியைத் தொடர்பு கொள்ளலாம். 11. கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மேலே பெயரிடப்பட்ட CDயின் சொத்து மற்றும் பொறுப்புகள் விற்பனை செய்யப்படும். இதுவரை கண்டறியப்பட்ட மேலும் கூறப்பட்ட சொத்தை இணைக்கும் உரிமைகோரல்கள் ஒவ்வொரு லாட்டுக்கு எதிராக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 12. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள லாட்களில் சொத்து விற்பனைக்கு வைக்கப்படும். சொத்தின் ஒரு பகுதியை விற்பனை செய்வதன் மூலம் அடையப்பட வேண்டிய தொகை திருப்தி அடைந்தால், மீதமுள்ள தொகையுடன் விற்பனை உடனடியாக நிறுத்தப்படும். ஏதேனும் ஒரு லாட் நாக்ட்டவுன் ஆனால் விற்பனையும் நிறுத்தப்படும். மேற்கூறிய சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகை, வட்டிச் செலவுகள் (விற்பனைக்கான செலவு உட்பட) விற்பனையை நடத்தும் அதிகாரியிடம் அளிக்கப்படும் அல்லது அத்தகைய சான்றிதழின் தொகை, வட்டி மற்றும் செலவுகள் கீழே கையொப்பமிடப்பட்டவருக்கு செலுத்தப்பட்டதற்கான சான்றுகள் அவருக்கு வழங்கப்படுகின்றன. 13. விற்பனை தொடர்பாக எந்த அதிகாரியும் அல்லது மற்ற நபரும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏலம் எடுக்கவோ, வாங்கவோ அல்லது விற்கப்பட்ட சொத்தின் மீதான வட்டியைப் பெறவோ முயற்சிக்கவில்லை. 14. .14. விற்பனையானது வருமான வரிச் சட்டம், 1961ன் இரண்டாவது அட்டவணையில் பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டது: இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிடப்பட்டவரின் தெரிந்த தகவலுக்குக் கூறப்பட்டுள்ளன, ஆனால் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது புறக்கணிப்புக்கு கீழே கையொப்பமிடப்பட்டவர் பதிலளிக்க மாட்டார். 15. ஏலத்தொகை அதிகரிக்கப்பட வேண்டிய தொகை ரூ. 1,00,000/– (ஒரு லட்சம் ரூபாய் மட்டுமே). ஏலத்தொகை அல்லது ஏலதாரர் தொடர்பாக ஏதேனும் சர்ச்சை ஏற்பட்டால், லாட் மீண்டும் ஏலத்திற்கு விடப்படும். 16. மேலும் அவர் ஏலம் எடுத்த தொகை குறைந்தபட்ச விலையை விட குறைவாக இல்லை எனில் வெற்றிகரமான/அதிக ஏலதாரர் ஏதேனும் ஒரு லாட் வாங்குபவராக அறிவிக்கப்படுவார். கொடுக்கப்பட்ட விலை மிகவும் தெளிவாகப் போதுமானதாக இல்லை எனத் தோன்றும்போது, அதிக ஏலத்தை ஏற்றுக்கொள்வதை நிராகரிப்பது கீழ் கையொப்பமிடப்பட்டவரின் விருப்பத்திற்கு உட்பட்டது. இ–ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் மற்றும் இஎம்டியை சரிசெய்த பிறகு (EMD) வெற்றி பெற்ற அதிக ஏலதாரர் விற்பனை விலையில் 25%ஐ டிஆர்டி–I, டெல்லி, ஏ/சி ஆர்.சி. 51/2010 பெயரில் டிடி/பேஆர்டரை தயாரிக்க வேண்டும். இ–ஏலம் முடிந்த 3 நாட்களுக்குள் மீட்பு அதிகாரியின் அலுவலகத்தை அடையும் வகையில் அதை அனுப்புதல்/டெபாசிட் செய்தல் வேண்டும், தவறினால் டேவணித்தொகை (EMD) பறிமுதல் செய்யப்படும். மீட்பு அதிகாரி, DRT –I, டெல்லி ஏ/சி. ஆர்.சி. 51/2010 பெயரில் வெற்றிகரமான/அதிக ஏலதாரர் விற்பனை தொகையில் மீதி உள்ள 75%ஐ சொத்து விற்பனை செய்யப்பட்ட நாளிலிருந்து 15 வது நாளிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ அத்தகைய நாளில் பிரத்தியேகமாக, அல்லது 15வது நாள் ஞாயிறு அல்லது பிற விடுமுறையாக இருந்தால், 15வது நாளுக்குப் பிறகு முதல் அலுவலக நாளில் பவுண்டேஜ் கட்டணம் @ 2% வரை ரூ. 1,000 மற்றும் @ 1% அத்தகைய மொத்தத் தொகையை விட ரூ. 1000/– பதிவாளர், DRT–I டெல்லி பெயரில் செலுத்த வேண்டும். (தபால் மூலம் 75% மீதித் தொகை டெபாசிட் செய்யப்பட்டால், அது மேலே குறிப்பிட்டபடி மீட்பு அதிகாரியை சென்றடைய வேண்டும்.) 19. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பணம் செலுத்தத் தவறினால், புதிய விற்பனை அறிவிப்பு வெளியான பிறகு, சொத்து மீண்டும் விற்கப்படும். விற்பனை செலவினங்களைச் செலுத்திய பிறகு டெபாசிட்தொகையை, கீழே கையொப்பமிடப்பட்டவர் பொருத்தமானது என்று நினைத்தால், அரசாங்கத்திற்குப் பறிமுதல் செய்யப்படலாம் மற்றும் தவறிய வாங்குபவர் சொத்துக்கான அனைத்து உரிமைகோரல்களையும் அல்லது அதன் பின்னர் விற்கப்படும் தொகையின் ஏதேனும் ஒரு பகுதியையும் இழக்க வேண்டும்.

லாட் எண்	இணை உரிமையாளர்களின் பெயர்களுடன் விற்கப்படும் சொத்தின் விவரம் அந்தச் சொத்து, கடனைத் திருப்பிச் செலுத்தாத மற்றும் இணை உரிமையாளராக இருக்கும் மற்ற நபருக்கு சொந்தமானது	சொத்து அல்லது அதன் எந்தப் பகுதியிலும் மதிப்பிடப்பட்ட வருவாய்	சொத்து மீது ஏதேனும் வில்லங்கம் இருப்பின் அது குறித்த விவரங்கள்	உரிமைகோரல்கள், ஏதேனும் இருந்தால், சொத்தின் மீது முன்வைக்கப்பட்டவை மற்றும் அதன் தன்மை மற்றும் மதிப்பைக் கொண்ட வேறு ஏதேனும் அறியப்பட்ட விவரங்கள்
1	எண். 19 மற்றும் 19எ காமராஜ் அவென்யூ, ஸ்ரீ தேவி கார்டன், ஸ்ரீ தேவி குப்பம் சாலை வளசரவாக்கம் கிராமம், சென்னை–87ல் உள்ள சொத்து	எந்த தகவலும் வரவில்லை		

ஜனவரி 25, 2023 அன்று என்னால் முத்திரையிடப்பட்டது.

(அனுகூல் யாதவ்), மீட்பு அதிகாரி–II, DRT–I, டெல்லி